செ.வெ.எண். 405 நாள்.21.08.2010

# சென்னை துறைமுகத்திலிருந்து மதுரவாயல் வரையிலான உயர்மட்டச் சாலை பற்றிய அரசின் செய்திக் குறிப்பு.

மதுரவாயிலிலிருந்து சென்னைத் துறைமுகத்திற்கு உயர்மட்டச் சாலை அமைப்பதற்காக, கூவம் கரையினை பயன்படுத்திக் கொள்ள, சென்னைத் துறைமுகக் கழகம் தமிழக அரசுக்கு 2007இல் விண்ணப்பித்தது. இதற்காக பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளர், நீர் ஆதார அமைப்பு அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, கூவம் நதிக் கரையைப் பார்வையிட்டு கடற்கரை கட்டுப்பாட்டுப் பகுதி ஆணையத்தினுடைய (CRZ) ஒப்புதல் பெற வேண்டும் மற்றும் இதர நிபந்தனைகளோடு தமிழக அரசுக்கு இத்திட்டம் பற்றி பரிந்துரைத்தது. அதனடிப்படையில், கொள்கை அடிப்படையிலான சம்மதம் 22.06.2007 அன்று தமிழக அரசால் தெரிவிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தை தயாரித்து நிர்வகிக்கும் பொறுப்பு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தத் திட்டத்திற்குத் தேவைப்படும் நில எடுப்பு மற்றும் இதனால் பாதிக்கப்படுபவர்களுடைய மறுவாழ்விற்கான செலவினம் ஆகியவற்றை சென்னைத் துறைமுகக் கழகமும், தமிழக அரசும் சரிபாதியாக பகிர்ந்து கொள்ளும் எனவும், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் இத்திட்டத்தினால் பாதிக்கப்படும் குடும்பங்களை கணக்கெடுத்து அவர்களுக்குத் தேவையான மறுவாழ்வு மற்றும் குடியமர்வு திட்டங்களைத் தயாரித்து அமல்படுத்த வேண்டுமெனவும், இந்த திட்டத்திற்காக தேவைப்படும் இதர உதவிகளை தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் செய்ய வேண்டுமெனவும் 07.03.2008 அன்று தமிழக அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்தத் திட்டத்திற்கான ஒப்புதலை மத்திய அரசு வழங்கியுள்ளது.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களால் 08.01.2009 அன்று இத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இச்சாலை அமைப்பதனால் பாதிப்புக்குள்ளாகும் குடும்பங்களுக்கு மறு குடியமர்வு செய்வதற்காக ரூ.400 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த செலவினம் சென்னைத் துறைமுகக் கழகம் மற்றும் தமிழக அரசால் சரிசமமாக பகிர்ந்து ஏற்றுக் கொள்ளப்பட உள்ளது. தேசியக் கடற்கரை ஒழுங்குமுறை ஆணையத்தால் இந்தப் பிரேரணை மத்திய அரசுக்கு 28.06.2010 அன்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தினால் பாதிப்புக்குள்ளாகும் குடும்பங்களை கணக்கெடுத்ததில் முதற்கட்டமாக, 5 குடிசைப் பகுதிகளில் வாழ்கின்ற 769 குடும்பங்களை கண்ணகி நகர் மற்றம் செம்மஞ்சேரி பகுதியில், குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி வீடுகளில் குடியமர்வு செய்யப்பட்டு விட்டனர். மீதமுள்ள 30 குடிசைப்பகுதியிலுள்ள குடும்பங்களை மறுகுடியமர்வு செய்வதற்காக, அடுக்கு மாடி கட்டடம் கட்டுவதற்காக இடங்கள் சென்னைக்கு அருகில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

தற்போது கணக்கெடுப்பு செய்யப்பட்ட குடும்பங்களிலிருந்து புகைப்படத்தோடு கூடிய விண்ணப்பப் படிவங்களை குடிசைமாற்று வாரியம் பெற்றுள்ளது. தகுதிவாய்ந்த குடும்பங்களுக்கு, ஒதுக்கீட்டு ஆணை வழங்கப்படும். கட்டுமானப் பணிகள் நிறைவுறும்வரை, ஒதுக்கீட்டு ஆணை வழங்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாதம் ரூ.1000/- வாடகையாக 21 மாதங்களுக்கு அளிக்கப்படும். மேலும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாற்று இடத்திற்கு செல்வதற்காக உதவித் தொகையாக ரூ.1000/- வழங்கப்படும். இந்த மறுவாழ்வுப் பணிகள் ஒவ்வொரு தகுதியுள்ள குடும்பத்திற்கு

வழங்கிய பின்னரே அவர்கள் தற்போது வசித்து வரும் ஆக்கிரமிப்பு இடத்திலிருந்து மாற்றப்படுவார்கள்.

புதிதாக கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்தில் இந்த குடும்பங்களுடைய நலனுக்காக அடிப்படை வசதிகள் மற்றும் கல்வி வசதி, மருத்துவ வசதி, பேருந்து வசதி, சமுதாயக் கூடம், நியாய விலைக் கடை மற்றும் குழந்தைகள் காப்பகம் ஆகியவை அமைத்துத் தரப்படும். மேலும், திறன் வளர்ச்சிப் பயிற்சி, தொழில் பயிற்சிகள், சுய உதவிக் குழுக்கள் அமைத்து சுழல் நிதி வழங்குதல் போன்ற வாழ்வாதாரத் திட்டங்கள் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் மறுகுடியமர்வு செய்யப்படுபவர்களுக்கு அளிக்கப்படும்.

எனவே, உயர்மட்டச் சாலை கட்டுவதால் பாதிக்கப்படும் கூவம் கரையோரம் உள்ள குடும்பங்களுக்கு உண்டான மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு திட்டங்கள் நிச்சயம் செயலாக்கப்படும். அதற்கான நிதி ஒதுக்கீடு இந்தத் திட்டத்திலேயே செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதன் மூலம் சென்னை மாநகரத் தெருக்களில் போக்குவரத்து நெரிசல் குறைந்து தற்போது இரவில் மட்டுமே அனுமதிக்கப்படும் வணிகப் பொருட்கள் போக்குவரத்து, சென்னைத் துறைமுகத்திற்கு சீராகச் செல்ல இயலும்.

அண்மையில் கூவம் நதிக் கரையின் மீது இந்த உயர்மட்டப் பாலம் அமையக் கூடாதென தொடுக்கப்பட்ட வழக்கினை சென்னை உயர்நீதி மன்றத்தின் முதன்மை அமர்வு நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

3/3

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

கோ. சந்தானம்
21.8.10
Secretary to Government
Highways & Minor Ports Department
Secretariat, Chennai-600 009.